Daily Thanthi

இதை எனது முதல் பக்கமாக்கு முந்தைய பதிப்பு Color Themes :

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

புதன்கிழமை , நவம்பர் 07, 2012

சற்று முன் : மதுரையில் பள்ளி கல்லூரிகளு

செய்திகள் | விளையாட்டு | வணிகம் | சினிமா | ஜோதிடம் | புத்தக உலகம் | மலர்கள் | தலையங்கம்

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் திருப்பாவை விமான பணிக்கு 1 கிலோ தங்கம்

BOOKMARK

பதிவு செய்த நாள் : Nov 07 | 01:47 am

**ஸ்ரீவில்லிபுத்தூர்,**

ஸ்ரீவில்லிபுத்தூர்ஆண் டாள் கோவில் திருப் பாவை விமான பணிக்கு சென்னையை சேர்ந்த வாஸ்து நிபுணர் ஆண் டாள் சொக்க லிங்கம் 1 கிலோ தங்கத்தை வழங்கினார்.

**தங்க விமானம்**

விருது நகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோவில் உள்ளது. இந்த ஸ்ரீவில்லி புத்தூர்ஆண் டாள் கோவிலில் மூலஸ்தான திருப்பாவை விமானம் முற்றிலும் தங்கமயமாக்கப் படும் பணிகள் கடந்த சில மாதங்களாக நடை பெற்று வருகிறது. இதில் 20கிலோ தங்கம் இதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்டு உள் ளது. இந்த நிலையில் இந்த பணி முடிய இன்னும் 40 கிலோ வரை தங்கம் தேவைப்படுகிறது என்று கூறப்படுகிறது. இதற் கிடையில் சென்னையை சேர்ந்த வாஸ்து நிபுணர் ஆண்டாள் சொக்கலிங்கம் தலைமையில் பக்தர்கள் சார் பில் ரூ.30 லட்சம்மதிப்புள்ள தங்க கட்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று காலை ஆண்டாள் கோவிலில் நடைபெற்றது.

**கோவில் தக்கர்**

இந்த நிகழ்ச்சியில் ஆண் டாள் கோவில் திருப்பணிக்கு வாஸ்து நிபுணர் ஆண்டாள் சொக்கலிங்கம், கோவில் தக் கர் ரவிச்சந்திரனிடம் ரூ.30 லட்சம் மதிப்புள்ள 1 கிலோ தங்க கட்டியைவழங் கினார். அப்போது ஆண்டாள் சொக் கலிங்கம் கூறும்போது,ஆண் டாள் கோவில் திருப்பணிக்கு மேலும் 10 கிலோ தங்கம் பக்தர்கள் மூலம் பெறப்பட்டு கொடுக்கப்படும் என்றார். இந்த நிகழ்ச்சியில்ஏராளமான பக்தர்கள் கலந்து கொண் டனர்.

**தங்கம் வழங்கலாம்**

இது குறித்து ஆண்டாள் கோவில் தக்கர் ரவிச் சந்திரன் கூறும் போது, ஆண் டாள் கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வரு கிறது. இதில் தங்க விமானபணிக்கு பக்தர் கள் தங்களால்இயன்ற தங் கத்தை கோவில் அலுவ லகத்தில்செலு த்தி உரிய ரசீது பெற்று கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

BOOKMARK

தொடர்புடைய செய்திகள்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் திருப்பாவை விமான பணிக்கு 1 கிலோ தங்கம்

தேவர் ஜெயந்தி விழா பேனர் அவமதிப்பை கண்டித்து ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆர்ப்பாட்டம் 100–க்கும் மேற்பட்டோர் கைது

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே சாலை விபத்து: 2 பேர் பலி

அதிகம் படித்தவை | அதிகம் ஈமெயில் செய்தவை

கண்ணமங்கலம் பகுதியில் மழை வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட ஆற்றுப்பாலங்கள் (3)

ஊத்தங்கரை அருகே லாரியில் ஆயுதங்களுடன் வந்த 3 பேர் கைது (4)

பாப்பாரப்பட்டி அருகே கூலித்தொழிலாளர்கள் 2 பேர் திடீர் சாவு (5)

கேரளாவில் தடை நீக்கப்பட்டதை தொடர்ந்து முட்டை, கோழிகள் கொண்டு செல்லும் பணி தீவிரம் (5)

திருவாரூர் மாவட்டத்தில் சிறப்பு பொதுமக்கள் குறைகேட்கும் கூட்டம் (2)

திருவாரூர் பஸ் நிலைய மேற்கூரை தளம் இடிந்து விழுந்தது (3)